அப்படிப்பட்டவருடைய குடும்பம் துயரத்திற்கு சூழ்நிலையால் ஆளாகிறது என்றால், அதைத் தவிர்க்கவேண்டியதும், அதை மாற்ற வேண்டியதும் நம் அனைவருடைய பொறுப்பு என்பதிலே எனக்குச் சந்தேகமில்லை. அந்தப் பொறுப்பை இந்த அரசு ஏற்றுக் கொள்ளும் என்பதிலே இங்கே நான் உறுதிகூறப் பின்வாங்கவில்லை. இங்கே மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கூறியதுபோல் அவருடைய வாழ்க்கைத் துணைவியார் இறுதிக் காலம் வரையில் அந்த வீட்டிலேயே இருப்பதற்கு இந்த அரசு வாய்ப்பு அளிக்கும் என்பதையும் அதோடு மட்டுமல்லாமல் திரு. கக்கன் அவர்களுக்குக் கொடுத்துக்கொண்டிருந்த மாத ஊதியம்—மாத ஊதியம் என்று சொல்லமுடியாது, சாணிக்கை என்று சொல்வது பொருத்தமாக இருக்குமென கருதுவோமானால் அதை இந்த அரசு தொடர்ந்து அந்த அம்மையாருக்கு அளிக்கும் என்பதையும் இங்கே எடுத்துக்கூறி, இருவருடைய மறைவிற்கும் அஞ்சலி செலுத்துகின்ற இந்த இரங்கல் தீர்மானங்களில் என்னுடைய உணர்வையும் சேர்த்துக்கொண்டு நான் அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மாண்புமிகு பேரவைத் முன்னவரும் மற்றக் கட்சித் தலைவர்களும் தெரிவித்த இரங்கல் கருத்துக்களோடு என்னுடைய உணர்வையும் இணைத்துக் கொள்கிறேன்.

தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் எழுந்து மவுனமாக இரண்டு நிமிடங்கள் நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றதன் மூலம் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றன.

(இ) முன்னாள் ஆளுநர் திரு. மோகன்லால் சுகாதியா மறைவு (தீ)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு எதிர்பாராத வகையில் திரு. மோகன்லால் சுகாதியா அவர்கள் மறைந்து போயிருக்கிறார்கள். அதற்கான இரங்கல் தீர்மானத்தை முன்மொழிய நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

16—6—1976 முதல் 8—4—1977 வரை தமிழ்நாடு ஆளுநராக இருந்த திரு. மோகன்லால் சுகாதியா அவர்கள் இன்று காலை பிகானீரில் மரணம் அடைந்த செய்தியைப் பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

"திரு மோகன்லால் சுகாதியா அவர்கள் ஜூலை 31, 1916 ஆம் ஆண்டு பிறந்தார். உதயபூர், நாத்வாரா, பம்பாயிலும் கல்வி பயின்றார். அன்னார் இளைஞர் காங்கிரஸில் தீவிர பங்கு

[பேரவைத் தலைவர்] [1982 பிப்ரவரி 2

எடுத்துக்கொண்டு 'வெள்ளையனே வெளியேறு' போராட்டத்தில் ஒன்றரை ஆண்டுகாலம் காவலில் வைக்கப்பட்டார். மேவார் மாநிலத்தில் உணவு பொருள் வழங்கல், பொதுப்பணித் துறை மற்றும் துயர் துடைப்பு மறுவாழ்வுத் துறை அமைச்சராக பதவி வகித்தார். இராஜஸ்தான் மாநிலத்தின் உதயபுரி நகரத் தொகுதியிலிருந்து சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு உணவு பொருள் வழங்கல் மற்றும் பாசனம் உட்பட்ட விவசாய அமைச்சராக 1951—52-லும், 1952—54 இல் விவசாயம், வருவாய் மற்றும் பஞ்சத் துயர் துடைப்புத் துறை அமைச்சராகவும், பின் நவம்பர் 1954-லிருந்து ஜூலை 1971 வரை இராஜஸ்தான் மாநிலத்தின் முதலமைச்சராகவும் பணி புரிந்தார்.

பிறகு 1972 ஆம் ஆண்டு பிப்ரவரி 1 ஆம் தேதியிலிருந்து 1976 ஆம் ஆண்டு சனவரி மாதம் 9 ஆம் தேதி வரை கர்நாடக மாநில ஆளுநராகவும், 1976 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10-ஆம் தேதியிலிருந்து ஜூன் மாதம் 15 ஆம் தேதி வரை ஆந்திர ஆளுநராகவும், 1976 ஆம் ஆண்டு ஜூன் 16 ஆம் நாளிலிருந்து 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8 ஆம் நாள் வரை நம் மாநிலத்தில் ஆளுநராகவும் இருந்தார்.

(முற்பகல் 10-00)

அன்னார் இன்று காலை இராஜஸ்தான் மாநிலத்தில் பிகானீர் நகரில் இயற்கையெய்தினார். அவர் சிறந்த அரசியல்வாதியாகவும், திறமைமிக்க நிர்வாகியாகவும் விளங்கினார். அவர் தற்பொழுது நாடாளுமன்றத்தில் உறுப்பினராகவும் இருந்தார். அன்னார் மறைந்ததைக் குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த துயரத்தையும் தெரிவித்துக் கொள்கிறது. அவரது மறைவால் வருந்தும் குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த பரிவையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது.''

தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் எழுந்து மவுனமாக இரண்டு நிமிடங்கள் நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றதின் மூலம் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மறைந்த பெரியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் நிகழ்ச்சிகள் 15 நிமிடங்களுக்கு ஒத்தி வைக்கப்படுகின்றன. பேரவை மீண்டும் காலை 10-20 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை காலை 10-01 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

1982 பிப்ரவரி 2]

காலை 10-20 மணி அளவில், மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

(உ) வினாக்கள் விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மின்கட்டண ஆய்வுக்குழு.

*வினா எண் 1—திரு. செ. செம்மலை : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மின் கட்டணத்தை திருத்தி அமைக்க மின் கட்டண ஆய்வுக்குழு அரசால் அமைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தக் குழு அரசிற்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளதா?

(இ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) அண்ட் (ஆ) ஆம்.

(இ) மின் கட்டண ஆய்வுக்குழு அரசுக்கு 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் மின்கட்டண சீரமைப்பு குறித்து இடைக்கால அறிக்கை சமர்ப்பித்தது. இவற்றை ஏற்று 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. குழுவின் இறுதி அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார உற்பத்திக்காகும் அடக்க விலையை விட அதனுடைய வினியோக விலை எந்தக் காரணத்தைக் கொண்டும் குறையக் கூடாது என்று மத்திய குழுவினுடைய பரிந்துரையின் அடிப்படையில்தான் இந்த மின் கட்டண ஆய்வுக் குழு அமைக்கப்பட்டதாகத் தெரிகிறது. பொதுவாக மின்சார உற்பத்தியின் அதிகச் செலவுக்குக் காரணம், நிலக்கரி விலை, பெட்ரோலியம் போன்ற மூலப் பொருள்களின் விலை, மற்றும் சரக்குக் கட்டணத்தினுடைய விலை உயர்வுதான் என்று தெரிகிறது. எனவே, இதுபோன்ற மூலப் பொருள்களை, மத்திய அரசு மாநில அரசுக்குக் கொடுக்கும்போது, குறைந்த விலைக்குக் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசை நம்முடைய மாநில அரசு வற்புறுத்துமா? அதற்காக இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை முதலில் அறிய விரும்புகிறேன்.